10th February 1959]

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know when this is likely to be finalised? After finalisation, will the Government be pleased to place a copy of the scheme on the table?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I cannot say when the State Trading Scheme will be finalised. It is being worked out and as soon as it is finalised certainly a copy will be placed on the table of the House.

SRI M. D. THIAGARAJA PILLAI : தலைவர் அவர்களே, நெல், அரிசி கொள்முதல் செய்வதில் முதல் ரேட்டாக, கடைசித் தரத்தில் இருந்து ஸி. 20 ரகத்தை மாற்றியிருக்கிறார்கள். ஆனால் தஞ்சாவூரில் கட்டைச் சம்பா நெல் அதிகம் விளைகிறது. அதை இரண்டாம் தரம் என்று நிர்ணயித்து விலையை குறைத்திருக்கிறார்கள். அதையும் உயர்த்த அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிகமாக ஒரு ரகத்தை உற்பத்தி செய்வதனால் மட்டும் விலையை உயர்த்த முடியாது. தனித்தனியாக அந்த அந்த ரகத்தைப் பிரித்திருக்கிறார்கள். வியாபாரிகளையும், உற்பத்தி செய்கிறவர்களையும் சிவில் சப்ளை அதிகாரிகள் கலந்து கொண்டு நிர்ணயிப்பது.

Economic prices for agricultural produce

* 163 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any decision has been taken at the meeting of the National Development Council held in November 1958 to guarantee minimum economic prices for agricultural produce; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) In view of the answer to (*a*) above, this question does not arise.

SRI N. K. PALANISAMI : பதினைந்து ரூபாய், பத்தொன்பது ரூபாய் என்று ஒரு மணங்குக்கு நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அது அவசியமா ? ஹோல் சேலாக இரண்டு லட்சம் டன் வாங்கினவுடன் நிறுத்தி விடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : செய்யப்பட்டிருக்கிற விலை நிர்ணயம் இரண்டு லட்சம் டன் வாங்குவதற்காக மட்டும் அல்ல. மொத்தமாக விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஹோல்சேல் விலை. ஏஜெண்டுகள் மூலமாகத்தான் விற்கவேண்டும் என்பது இல்லை. உற்பத்தியாளர்கள் நேரடியாக அரசாங்கத்திடமே விற்கலாம்.

SRI T. SAMPATH : May I know on what basis prices of paddy and rice were fixed? Have Government any intention of fixing floor prices for paddy and rice?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have taken into account the price factors prevailing in the Southern States and fixed maximum prices.

SRI M. KALYANASUNDARAM: இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலையானது வியாபாரிகளிடமிருந்தும், மில் சொந்தக்காரர்களிடமிருந்தும் வாங்குவதற்காகவா ? அவர்கள் விவசாயிகளிடத்திலிருந்து என்ன விலைக்கு வாங்குவார்கள் ? இதனால் விவசாயிகள் நிலை பாதிக்கப்படாமலிருக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: வியாபாரிகள் இப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலைக்குக் கேட்காவிட்டால் விவசாயிகள், அரசாங்கத்திடமே நேரிடையாக விற்கலாம் என்று சொன்னேன். ஆகவே வியாபாரிகள் விவசாயிகளைச் சுரண்ட முடியாது.

SRI K. PERIANNAN: விலைபொருளின் விலையைக் கட்டுப்படுத்தக் கூடிய நமது சர்க்கார் விவசாயத்திற்கு வேண்டிய இதர பொருள்களின் விலையையும் கட்டுப்படுத்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அது வேறு விஷயம். அதில் எந்த அளவு, கட்டுப்படுத்த முடியும் என்று நான் சொல்வதற்கில்லை.

Procurement of paddy

* 164 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there was a discussion in the National Development Council meeting held in November 1958 about the procurement of paddy in the State by the State Government; and

(*b*) the stand taken by the Government during the debate?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) This Government was in support of the proposal.

SRI N. K. PALANISAMI: வாங்குவதற்கு சீலிங் ப்ரைஸ் வைத்திருப்பதைப்போல விற்பதற்கும் சீலிங் ப்ரைஸ் நிர்ணயம் செய்யப்படவில்லையா ? இதனால் நடுவில் வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிக்க வசதி உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அரசாங்கத்திடமே நேரில் விற்கலாம் என்று நான் முன்பே சொல்லியிருக்கிறேன்.

SRI K. B. S. MANI: சர்க்கார் விலை நிர்ணயித்திருந்தாலும் பக்கத்து ராஜ்யங்களைச் சேர்ந்த வியாபாரிகள் அதிக விலைக்கு தஞ்சாவூர் ஜில்லா நெல்லை வாங்கிப்போகத் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆகவே இப்படி வெளியில் இருந்து வியாபாரிகள் வந்து கொள்முதல் செய்வதைத் தடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இரண்டொரு நாட்களுக்குள் கேரள அரசாங்கமும் விலை நிர்ணயம் செய்துவிடும்.

SRI N. K. PALANISAMI: நேரிடையாக சர்க்காரே ஹோல் சேலில் வாங்கலாம் என்றும் அப்படி வாங்குவதற்குப் போதிய ஆபீசர்களையும் இந்தச் சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் சொன்ன பதிலில் அப்படி வாங்கிக்கொள்வதற்குத் தயார் என்றுதான் சொன்னேன். விவசாயிகள் அப்படி சர்க்காரிடத்தில் நேரிடையாக விற்க முன் வரமாட்டேன் என்கிறார்கள் என்பதுதான் புகார். அவர்கள் பதுக்கி வைத்துக் கொள்கிறார்கள் என்பதுதான்,